# ஆரியர் வருகையும் தமிழ்ச் சமூகமும்

**க.கருப்பசாமி**

முனைவர்பட்ட ஆய்வாளர்

தமிழியற்புலம்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – *21*

## முன்னுரை

ஆரியர்களைப் பற்றிய ஆராய்ச்சி பெருமளவு நிகழ்ந்துள்ள போதும் ஒரு புதுவிதமான பார்வையில் பார்ப்பதற்கு ஆரியர் வருகையும் சூழ்ச்சியும் என்னும் இக்கட்டுரை முயற்சி செய்கின்றது எனலாம். ஆரியரின் வருகை இந்தியப்பதிவுகளில் சரியாகக் குறிக்கப்படவில்லை என்றாலும் கி.மு. 1500 ஆண்டுகளில் ஆரியரின் இந்திய வருகை நிகழ்வுற்றிருக்கக் கூடும் என்பதை ஆய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். ஆரியர்கள் பற்றிக் கூறும் செய்திகள் அனைத்தும் திரும்பத் திரும்பக் கூறும் செய்திகளாகவே உள்ளன. புதிய செய்தியைத் தெரிவிக்க எவரும் முன்வருவதில்லை. ஆதலால் புதிய நோக்கில் ஆரியர்கள் தமிழ்ச் சமூகத்திற்குச் செய்த சூழ்ச்சியை வெளிப்படுத்த இக்கட்டுரை முயற்சிக்கின்றது.

## ஆரியர்

‘அரி’ என்னும் வேர்ச்சொல்லிலிருந்து உருவானது ஆரியர் என்னும் சொல். இச்சொல்லிற்கு ‘அந்நியர்’ என்ற பொருளுண்டு. ‘ஆரிய’ என்ற சமஸ்கிருத சொல்லுக்கு சுதந்திரமாகப் பிறந்த, உயர்க்குணம் படைத்த, மூன்று மேல்சாதி மக்களில் ஒருவர் என்று பொருள் வழங்கப்படுகின்றது. ஆரியன் என்ற சொல்லுக்கு அதிகார ரீதியில் வழங்கப்பெற்ற தத்துவ விளக்கங்களைப் பொருளாகக் கூறலாம். புனித வேதங்களைப் போற்றும் தெய்வங்களுக்கு மரியாதை செலுத்தி வந்த மக்களே ஆரியர் என்று புனித வேதங்கள் உரைக்கின்றன. கி.மு 1500ஆம் ஆண்டுகளில் நாடோடிகளாக வாழ்ந்தவர்கள் ஆரியர்கள் என்று தொல்பொருள் ஆராய்ச்சி கூறுகின்றது.

## ஆரியர் வருகை

வேதப்பிராமணராகிய ஆரியர்கள் சிந்துவெளிப் பண்பாட்டின் காலத்திலேயே தமிழரிடையே ஊடுருவி நிலைபெற்றுவிட்டனர். இதனை ஹரப்பா, மொகஞ்சதாரோவில் கிடைத்த தொல்பொருள்கள், ஆரிய தொல் வேதப் பாடல்கள் வழி அறியமுடிகின்றது. ஆரியரின் வருகை குறித்து

ந.சி.கந்தையாபிள்ளை, "காஸ்பியன் கடலுக்கும் கருங்கடலுக்குமிடையே வெண்ணிரமுடைய ஒரு சாதியார் வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இவர்கள் ஆடு, மாடுகளை நம்பி அவை கொடுக்கும் பயன்களைக் கொண்டு வாழ்பவர்களாக இருந்தார்கள். கி.மு.2000 வரையில் இயற்கை மாறுபாட்டால் பெருவறட்சி உண்டானது. புல்வெளிகள் கருகிப் போயின. ஆகவே இவர்கள் பல கூட்டங்களாகப் பிரிந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் பாரசீகத்துக்கும் சென்றார்கள். பாரசீகத்திற்குச் சென்றவர்கள் அங்கு சில நூற்றாண்டுகள் தங்கி வாழ்ந்தார்கள். அவர்களில் சிலர் கூட்டங்களாகப் பிரிந்து கைபர் கணவாய் வழியாக இந்தியாவின் வடமேற்குப் பகுதியை அடைந்தார்கள்." அவர்களே ஆரியர் எனப்பட்டார்கள் என்பார்.

"ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்தபோது இங்கு வாழ்ந்த மக்களிடையே உடல் அமைப்பாலோ, நிற வேறுபாட்டாலோ எவ்விதக் குழுக்களும் செயல்முறையில் இல்லை. ஆனால், இங்கு வந்தேறிய ஆரியர்கள் உடலாலும், நிறத்தாலும், மொழியாலும், சமயத்தாலும் இந்நாட்டு மக்களிடையே வேறுபட்டனர்" என பக்தவத்சலபாரதி ஆரியர் வருகை குறித்துக் கூறுகின்றார்.

"இன்றைய இந்தியாவின் வடமேற்கு பகுதி வழியாக ஐம்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர், ஆரியர்கள் புலம்பெயர்ந்து வந்தபோது தான், முதன்முதலாக இந்தியத் துணைக்கண்டத்தில் பெரும்வரலாற்று மாற்றங்கள் நடந்தன. தொடர்ந்து, இந்த இனம் பூர்வீகக் குடிகளின் இருப்புகளைச் சிதைத்துவிட்டு, இந்தியா முழுவதும் பரவத் தொடங்கியது" என தி.சு.நடராசன் குறிப்பிடுகிறார்." இதன் மூலம் ஆரியர்கள் வடக்கிலிருந்து வந்து இந்தியாவில் காலூன்றினர் என்பது தெளிவாகிறது.

ஆரியர்கள் கைபர், கணவாய் வழியாக இந்தியாவில் புகுந்து சிந்துவெளியின் ஆற்றுப்படுகையில் தங்கிப் பின் படிப்படியாக பாரதம் முழுவதும் ஊடுருவினர். தமிழகத்திற்கு அவர்கள் வந்த நிலையினை, "ஆரியர் தமிழ்நாட்டிற்கு ஒரேமுறையில் பெருங்கூட்டமாய் வரவில்லை. சிறுசிறு கூட்டமாய்ப் பலமுறையாக வந்தனர். ஆரியர் தமிழ் கற்றுத் தமிழாசிரியராகவும், பின்பு மதவாசிரியராகவும் அமர்ந்தபின், தமிழரசே பார்ப்பனரைக் கூட்டங்கூட்டமாய் வடநாட்டினின்றும் வருவித்துத் தமிழ்நாட்டில் குடியேறினர்" என்பார் தேவநேயப்பாவாணர். அவ்வாறு ஊடுருவி நிலைபெற்ற ஆரியர்கள், தமிழாசிரியராகவும், மதவாசிரியராகவும் அமர்ந்த பின்னர் தமிழர் தம் சமூகப் பண்பாட்டோடும் சமயக் கொள்கைகளோடும் தம் சமயக் கொள்கை வழிபடு தெய்வம், வழிபாட்டு முறைமை போன்றவற்றைப் புகுத்தத் தொடங்கினர். எனவே தமிழர் வழிபாட்டில் ஆரிய – திராவிட தெய்வக் கலப்பும் ஆரிய வழிபாட்டு முறைமையின் ஆதிக்கமும் நிலைபெற்றுவிட்டது.

இமயத்தை ஒட்டி வாழ்ந்த பல கருப்பு இன மக்களோடு போராடி இந்திய நாட்டின் வடபகுதியில் தங்களின் நிலையான இருப்பை தக்க வைத்துக் கொண்டனர். பல இனமக்களோடு மோதி வென்று, கலந்து ஆரிய சமுதாயமாக காலூன்றிய காலவரையறையை வரலாற்றாசிரியர்கள் கி.மு இரண்டாயிரத்து ஐந்நூற்றிலிருந்து கி.மு ஆயிரத்து ஐந்நூறு வரை வரையறுக்கின்றனர். மேற்கூறிய அறிஞர் பெருமக்களின் கருத்;துக்களின்படி ஆரியர்கள் வடக்கிலிருந்து கைபர் போலன் கணவாய் வழியாக இந்தியாவிற்கு பிழைப்பிற்க்காக வந்தவர்களே தவிர, இவர்கள் இந்தியாவின் பூர்விகக் குடிகள் அல்ல என்பது மிகத்தெளிவாகத் தெரிகின்றது.

பார்ப்பனர், அந்தணர்

பிராமணர்களைக் குறிப்பதற்கு பார்ப்பனர், அந்தணர் என்ற இருவேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. “அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்” (தொல்.பொ.புறத்.74), “பேணுதகு சிறப்பிற் பார்ப்பான்” (தொல்.பொ.செய்.491) என்று தொல்காப்பியம், பார்ப்பனர் என்ற சொல்லை கையாள்வதோடு அவர்களுக்கு உண்டான ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பன ஆறு தொழில்களையும் பற்றிக் குறிப்பிடுகின்றது. அதனைத் தொடர்ந்து பார்ப்பனரைக் குறிக்கும் அந்தணர் என்ற சொல்லையும் தொல்காப்பியம் கையாள்கிறது. இதனை,

“நூலே கரகம் முக்கோல் மணையே

ஆயுங் காலை அந்தணர்க்குரிய” (தொல்.பொ.மரபு.615),

“அந்தணாளர் காசு வரை வின்றே” (தொல்.பொ.மரபு.627)

என்ற நூற்பாவால் அறியமுடிகிறது. பார்ப்பனர், அந்தணர் ஆகிய இருவரும் இருவேறு பிரிவைச் சேர்ந்தவர்கள் என்ற சிந்தனைப்போக்குச் சிலரிடம் நிலவி வருகின்றது. ஆனால் இருவரும் ஒரே பிரிவினர் என்பதற்கு இலக்கியங்கள் சான்றளிக்கின்றன.

“அறுதொழில் அந்தணர் அறம்புரிந்து எடுத்த

தீயொடு விளங்கும் நாடன்” (புறம்.397)

என்ற புறநானூறு பாடல் அடிகளும்,

“ஓதல், வேட்டல், அவைபிறர்ச் செய்தல்

ஈதல், ஏற்றல் என்றுஆறு புரிந்து ஒழுகும்

ஆறம்பரி அந்தணர்" (பதிற்.24)

என்ற பதிற்றுப்பத்து பாடலடிகளும் அந்தணர் பற்றிக் குறிப்பிடுகின்றன. "அறுவகைப்பட்;ட பார்ப்பனர்" என்று புறமும் பதிற்றுப்பத்தும் குறிப்பிடுகிறது. பார்ப்பனரும் அந்தணரும் அறுதொழில்களைச் செய்பவர்கள் என்று குறிப்பிடுவதால் இருவரும் ஒரே பிரிவைச் சேர்ந்தவர் என்பதில் ஐயமில்லை. மேலும் அகராதிகள் சில விளக்கங்களைக் குறிக்கின்றன.அதாவது "அந்தணர் ஆறு அங்கங்களையும் துணையாகக் கொண்டு வேதத்தைப் பயில்வோர்" என்று சங்க இலக்கிய பொருட்களஞ்சியமும், "அந்தணர் பெரியார், செந்தண்மையாளர்" என்று மலேசிய செந்தமிழ் அகராதியும், "பார்ப்பன் பிராமணன், பிரமன், யமன்" என்று தமிழ் லெக்சிகன் அகராதியும், "அந்தணன் முருகன், கடவுள், சனி, சிவன், பார்ப்பன், வியாழன், பிராமன், இயமன், பிராமணன்" என்று தமிழ்மொழி அகராதியும், "அந்தணன் வேதத்தின் அந்தத்தை அறிபவன், செந்தன்மையுடையவன், பெரியோன், முனிவன், கடவுள், பார்ப்பான், சனி, வியாழன். பார்ப்பான் பிராமணன், பிராமன், யமன்" என்று மெய்யப்பன் தமிழ் அகராதியும் குறிப்பிடுவதிலிருந்து பார்ப்பனர், அந்தணர் என்ற இருவேறு சொல்லாட்சியும் பிராமணரையே குறிக்கிறது என்பதைக் காணமுடிகிறது.

மொழியில் ஊடுருவல்

கால்நடைகளை மேய்த்துக் கொண்டு வந்த ஆரிய இனம் திராவிடர்களைப் போல் கருப்பாக இல்லாமல் வெண்மை நிறமாக காணப்பட்டதோடு மொழியாலும் வேறுபட்டனர். ஆரியர்கள் வெண்மை நிறமுடையவர்கள், வேதகாலத்தில் ஆரியர்கள் பலரும் தலையின் வலதுபக்கத்தில் குடுமி வைத்திருந்ததாகவும் தாடி வளர்த்ததாகவும் தெரிகின்றது. சாதாரண மக்களாகிய ஆரியர்கள் கோவணமும் துண்டும் உடுத்தியிருந்ததாக அறியமுடிகிறது. கருப்பு இன மக்களிடமிருந்து தங்களைத் தனித்துக்காட்ட வெண்மைநிறம் சாதகமாக அமைந்தது. மேலும் நிறத்தை முதன்மையாகக் காட்டி உயர்ந்த வர்க்கத்தினராகத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளமுடிந்தது.

வரலாற்று அடிப்படையில் ஆரியன் என்பது ஆரியமொழியைப் பேசுபவர்களைக் குறிக்கிறது என்றுதான் தெரிகிறது. தொடக்க கால ஆரியர் பேசிய மொழி கிரேக்கத்தையும், பாரசீகத்தையும் வேத ஆரியத்தையும் ஒட்டியதாகும். இவர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தபோது மிகச் சிறுபான்மையராயிருந்ததினால் வட இந்தியப் பழந்திராவிட மக்களுடன் கலந்தனர். அதனால் தம் முன்னோர் மொழியினைப் பேசும் ஆற்றலை இழந்ததுடன் வேத ஆரியர் மொழியுடன்

பிராகிருதத்தைக் கலந்து அமைத்துக் கொண்ட சமசுகிருதம் என்னும் வடமொழியின் மீது மிகுந்த பற்றுக் கொண்டனர். இதன் விளைவாகப் பிற வட்டார மொழிகள் அனைத்தினூடும் சமசுகிருதத்தைப் புகுத்தத் தொடங்கினர். இக்காலத்தில் ஆரியமொழி சமஸ்கிருதம் என்பதில் ஐயமில்லை என்று ரொமிலாதாப்பர் குறிப்பிடுகிறார். சுமஸ்கிருதமே ஆரியர்களின் மொழியாகும். இத்தகைய மொழி வேதமொழி. புனிதம் நிறைந்தது என்றெல்லாம் புனைந்து வடமொழியை உயர்த்தியும் தமிழை இழித்தும் கூறிய இவர்கள் தம் சமயக் கொள்கைகளைப் புகுத்தவும், பார்ப்பார் உயர்வுச் சிந்தனைகளைப் புகுத்தவும் தமிழைக் கற்றுத் தேர்ந்தனர். மன்னர்களையும், மக்களையும் வேள்விகள் செய்வித்தல், அந்தணர் ஓம்பல், பார்ப்பார் நோவன செய்வதொழித்தல் முதலியவற்றைச் செய்ய வற்புறுத்தி வாழ்வடைந்தனர். மேலும் தாம் கற்றுத் தேர்ந்தோராய் விளங்கியமையின் மொழியில் வடசொற்களைக் கலந்தனர் என்பர். இதனைத் தொல்காப்பியர்,

"வடசொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ
எழுத்தோடு புணர்ந்த சொல்லாகும்மே" (தொல்.884)

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்" (தொல்.885)

என்னும் நூற்பாக்கள் வழி விளக்குகின்றார். சங்கப் புலவர்களில் கபிலர் முதலிய பிராமணர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தமையினாலும் வடசொற் பயன்பாடுகள் மிகுந்திருந்தன எனலாம்.

வருணப் பாகுபாட்டிற்குள் அடக்குதல்

ஆரியர் வருகைக்கு முந்தைய தமிழரிடையே வருணப் பாகுபாடு இருந்திருக்கவில்லை. "யாயும் ஞாயும் யாராகியரோ? எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்" (குறள்.40) என்பதே அவர்தம் கொள்கையாக இருந்தது. "துடியன், பாணன், பறையன், கடம்பன்" (புறம்.335: 7-8) என்பன போன்ற தொழிற்பாகுபாடு இருந்ததே தவிர வருணப்பாகுபாடு இல்லை.

தொல்காப்பியர் அகத்திணையியலில் நால்வருணப் பாகுபாடு பற்றி உரைக்கிறார். "மேலோர் முறைமை நால்வர்க்கும் முரித்தே" (தொல்.975) என்னும் நூற்பாவில் இந்நால்வரில் உயர்வு தாழ்வு இருந்தமையைப் புலப்படுத்துகின்றார். மேலும் "பிறப்பே குடிமை...." (தொல்.1219) என்னும் நூற்பாவிற்கு உரை வரைந்த இளம்பூரணர், "பிறப்பாவது அந்தணர், அரசர், வணிகர், வேளாளர், ஆயர், வேட்டுவர், குறவர், நுழையர் என்றாற்போல வருங் குலம்" என்றும் பேராசிரியர், "பிறப்பென்பது குடிப்பிறத்தல்" என்றும் விளக்கம் தந்துள்ளனர்.

பார்ப்பார்க்குரிய தொழில்களாகத் தொல்காப்பியர், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறினைக் குறிப்பிடுவர். இவை தவிரக் கற்பில் தலைவன் தலைவிக்குப் பாங்காயினராகவும் (தொல். 1128), களவிலும், கற்பிலும், கூற்று நிகழ்த்துதற்குரியதாகவும் (தொல்.1445, 1446), வாயில்கள் பன்னிருவருள் ஒருவராகவும் (1139), இவர்கள் கூறப்பட்டுள்ளனர். எனவே தமிழரிடையே ஊடுருவிய ஆரியர்கள் தொடக்க காலத்தில் அரசர்க்கும், சிற்றரசர்க்கும் பாங்கராயமர்ந்து தலைவனைப் பரத்தையருடன் கூட்டுவிப்பராய் விளங்கினர் என்றும் மன்னர் மனதில் நிலை பெற்றுச் சமய ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிய பின்னர் மேற்கூறிய அறுவகைத் தொழிலுக்கும் உரியராயினர் எனவும், இப்பாங்கராய் அமர்வதன் மூலம் அரசனைத் தன்வயப்படுத்தினால் மக்கள் தாமே வயப்படுவர் எனக் கருதியமையின் அரசரிடத்தில் பாங்கராயமர்ந்தனர் என்றும் கருத இடமுண்டு.

தீ வழிபாடு

மனித நாகரீகம், தென்னிந்தியாவைப் போல வட இந்தியாவில், பழங்காலத்தில் அதாவது வேதங்களும், வேத மந்திரங்களும் இயற்றப்படுவதற்கு நிலைக்களமான தீ வழிபாட்டு முறைகள் எழுவதற்கு முற்பட்ட காலத்தில், வளர்ந்திருக்க வேண்டும். கடவுளுக்குப் படைக்கும் அனைத்தும், கொழுந்துவிட்டு எரியும் தீக்கடவுளின் வாயில் இடுதல் வேண்டும் என்ற நம்பிக்கையை அளிக்கும் தீ வழிபாட்டு நெறி, வட இந்தியாவில் ஏறத்தாழ கி.மு.4000 -இல் உருவாகிவிட்டது.

ஆரம்ப கால மக்களால் அறுதியிட்டுக் கூற முடியாத ஒரு திவ்யப் படைப்பு தீ. தீயை உண்டாக்குபவர்களும், பாதுகாப்பவர்களும் சமூகத்தில் முக்கியத்துவம் பெறத் தொடங்கினர். இந்த தீயைப் பாதுகாத்து வழிபட்டு வந்தவர்கள் தான் ஆரியர்கள். வடதுருவப் பகுதியில் வாழ்ந்த ஆரியர்கள் தாங்க முடியாத குளிரால் வாடி, சூரிய ஒளியைக் காண ஆண்டு முழுவதும் தவமிருந்த நிலையில் மத்திய ஆசியாவுக்குள் நகர்ந்து, இந்தியாவின் கங்கை யமுனைச் சமவெளியில் பரவினர்.

அப்போது வானோங்கி வளர்ந்து நின்ற மரங்கள், காற்றினால் ஒன்றுடன் ஒன்று மோதி உராய்ந்தபோது, இதிலிருந்து நெருப்புத் தோன்றிது, இதைக் கண்ட இம்மக்கள் பெரிதும் மகிழ்ந்தனர். தீயானது குளிர்காய உதவியது, சூரியனைக் காணாமல் இருள் நிறைந்த சூழலில் வெளிச்சம் கொடுத்தது. இதனால் தங்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கும் என்று கருதி நெருப்புக்கு உயிரோட்டம் கொடுத்தனர். நெருப்பானது வானத்தை நோக்கி தொடர்ந்து எரிந்து கொண்டிருந்த நிலையில் பறவை, விலங்கினங்கள் விழுந்த போது அவை உருகி, ஆவியாக மேலே செல்வதைக் கண்டதும், தீ உணவு உண்பதாக நினைத்தனர். இதனால் அக்கினியையும், சூரியனையும் கடவுளாக வழிபட்டனர். அக்கினி

மூலமே மேலுலகத்திலுள்ள தெய்வங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என நம்பினர். இதனால் வானுலகத் தேவதைகள் தங்களுக்கு மழையையும், வளத்தையும் தருவதாக நம்பியதால் ஆரியர்களுக்கு வேள்விகளே வழிபாடாக இருந்தது.

**ஆரியரின் யாகங்கள்**

ஆரியர்களின் பண்பாட்டுக் கூறுகளில் மிகவும் முக்கிய இடத்தைப் பிடித்திருப்பது யாகங்கள் ஆகும். தீ 'யாகம்' என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. யாகங்களின் வழியே தங்களின் வேண்டுதலை பூர்த்தி செய்து கொள்ளமுடியும் என நினைத்தனர். ஆரியர்களின் இத்தகைய எண்ணம் மன்னர்களிடமும் மக்களிடமும் ஆதிக்கம் பெற்றுவிட்டது. "ஆரியர் கடவுளை மகிழ்ச்சி அடையச் செய்கின்ற பலி என்ற சம்பிரதாயத்தின் மற்றொரு வடிவமே யாகம். யாகம் கடவுளை மகிழ்விக்க என்பதற்காக இருந்தாலும் ஆரியர்கள் உணவிற்காகவே யாகங்களைச் செய்துள்ளனர். கடவுளை இன்புறச் செய்வதற்காகக் கொல்லப்படுகின்ற குதிரை, பசு, ஆடு, காளை போன்றவைகளை அக்னிக்கு அர்ப்பணித்த பின்பு, அவற்றை எடுத்து யாகம் செய்யும் ஆரியர்கள் உணவுக்காகப் பயன்படுத்தினர். உணவுத் தேடலுக்காக அமைக்கப்பட்ட யாகம், காலச்சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப மாறிவிட்டது. விலங்குகள் பலியிடும் முறை தற்போது இல்லை எனலாம். ஏனெனில் விலங்கு பலியிடும் முறை சமூகத்தில் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாக மாறிய வேளையில் ஆரியர்கள் இத்தகைய சூழலுக்கு ஏற்ப தங்களுக்கு ஏற்றவாறு சடங்கமுறைகளை மாற்றிக்கொண்டு மக்களிடையே ஆதிக்கம் செலுத்தினர்.

ஆரியர், திராவிடர்களிடையே ஏற்பட்ட பண்பாட்டுக் கலப்பினால், வடநாட்டுத் தெய்வங்களின் சடங்கினை மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல் திராவிட இயக்கத் தெய்வங்களுக்கு உருவம் கொடுத்து தனதாக்கிக் கொண்டனர் என்ற செய்தியை மயிலை சீனி.வேங்கடசாமி தனது நூலில் குறிப்பிடுகிறார். செல்வாக்குள்ள ஒரு சமயத்தின் நம்பிக்கைகளை, சடங்குகளை வேறு சமயங்கள் தன் வயமாக்கிக் கொள்ளுதல் என்பது வரலாற்றில் இயல்பான நிகழ்வுகளாகும். ஆரியர்கள் வேள்விகளை செய்ததோடு அவற்றில் கொல்லப்பட்ட மிருகங்களின் மாமிசத்தை உண்டனர் என்பதை,

"ஒரு பிராமணன் மந்திரத்தினாற் கொல்லப்பட்ட

மிருகாதிகளின் மாமிசத்தைப் புசிக்கலாம்" (மனு.அத். 5: சூ.27)

"உயிருக்கு ஆபத்து நேருங்கால் புசிக்கத்தக்க பிராணிகளை

நாள்தோறும் புசித்த போதிலும் தோஷத்த அடைய மாட்டேன்" (மனு.அத். 3: சூ.10)

இதன் மூலம் அறியலாம். வடக்கிலிருந்து வந்த ஆரியர், தமிழரசரை தன்வயப்படுத்திக் கொண்டனர். அதன் விளைவாகச் சங்க கால மன்னர்களும், பார்ப்பன ஆதிக்கத்திற்காகப் பேரளவு இடமளித்தனர். இடமளித்ததோடு அவர்களும் தங்கள் உயர்வு கருதி ஆரியர்களோடு சேர்ந்து பல்வேறு யாகங்களைச் செய்தனர். மேலும் அவர்களுக்கு நிலங்களையும் ஆடு, மாடுகளையும் தானமாகக் கொடுத்த செய்தியை வரலாறும் இலக்கியமும் பதிவு செய்துள்ளன.

"தமக்கமைந்த தொழில் கேட்பக்

காடொன்றா நாடொன்றாங்

கிரேழி னிடமுட்டாது

நீர்நாண நெய்வழங்கியும்..." (புறம்.166)

என்ற பாடலடி ஆரியர்கள் மான் தோலும், பூணுலும் அணிந்து இருந்தமையையும். நேய்யை ஊற்றிப் பல வேள்விகள் செய்தமையையும் சுட்டுகின்றன. சோழன் குளமுற்றத்துச் துஞ்சிய கிள்ளி வளவனைச் சிறப்பிக்கும் எரிக்காட்டூர் தாயங்கண்ணனார்,

"அறுதொழிலி லந்தண ரறம்புகின் றெடுத்த

தீயொடு விளங்கும் நாடன்" (புறம் 20-21)

என்ற பாடல் மூலம் வேள்வி வழிபாடு நடத்தியதைக் குறிப்பிடுகிறார். தெய்வ வழிபாடு செய்யும் முறையை அந்தணர்கள் முன்னின்று நடத்தினர் என்பதை,

'மா இருந் திங்கள் திங்கள் மறுநிரை ஆதிரை

விரிநூல் அந்தணர் விழவு தொடங்க' (பரி.11-77-78)

என்ற பாடலடியின் மூலம் உணரலாம். மக்கள் சுற்றத்தாருடன் சென்று, திருக்கோயில் வலம் வந்து, அர்ச்சகர் காட்டிய முறைப்படி வழிபாடாற்றி வந்த செய்திகளும் பரிபாடல் முதலியவற்றால் தெரிய வருகிறது. வேள்வி செய்கின்ற களங்களுக்கு மக்கள் சென்று அங்கு நிகழும் காட்சிகளைக் காணுதலும் வழிபடுதலும் உண்டு என்பதை, "வேள்வியின் அழகுஇயல் விளம்புவோரும்" (பரி. 19:43) என

வருவது கொண்டு அறியலாம். புகார் நகரத்து வணிகர்கள் தெய்வங்களுக்கு அவி வழங்குவதிலும், பேணுவதிலும், பகடு ஓம்புவதிலும் ஈடுபட்டதை கீழ்வரும் பாடல் மூலம் அறிய முடிகிறது.

“அமரர்ப் பேணியும் மாவுதி யருத்தியு
நுல்லானொடு பகடோம்பியு
நூன்மறையோர் புகழ் பரம்பியும்” (பட்டின, 200-202)

**அந்தணர் மேலாண்மை**

அரசர்களைக் காட்டிலும் அந்தணர்கள் மேலானவர்கள் என்ற கருத்து வேதங்களிலும், தர்மசாத்திரங்களிலும் காணப்படுகிறது. ‘அரசு அந்தணர்க்குரியதே’ என்ற கருத்தும் உள்ளது. அந்தணப் புலவர்களில் ஒருவரான கபிலர் மலையமான் திருமுடிக்காரியை விளித்து “நின்னாடே, அழல் புறந்தரூஉம் அந்தணரது” (புறம்.122) எனக் குறிப்பிட்டுள்ளார். மன்னர் இறைவனுக்கும், அந்தணருக்குமே பணிவர் என்ற கருத்துப்படக் காரிகிழார் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை,

“பணியியரத்தை நின்குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவரேந்து கை எதிரே” (புறம்.6)

என்னும் பாடலின் மூலம் கூறுவது புலப்படுகிறது. மேலும் கபிலர் செல்வக் கடுங்கோ வாழியாதனை விளித்து “பார்ப்பனருக்கல்லது பணியறிகிலையே” (பதிற்று.63-1) எனக் கூறியிருப்பதன் மூலம் அந்தணர்களின் மேலாண்மை புலப்படுகிறது.

பிராமணர்கள் ‘கோவில்’ என்ற புதிய திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தினர். மந்திர தந்திர வேலைகளில் தம்மை மாற்றிக் கொண்டனர். அம்மந்திர தந்திர யாகங்களில் ஆடு, மாடு தரும் பால், தயிர், நெய் போன்றவைகளை நெருப்பில் ஊற்றித் தங்கள் பலியிடும் பழக்கத்தை மட்டும் விடாமல் தொடர்ந்து பின்பற்றிக் கொண்டிருக்கின்றனர். இச்செயல் பூசி மொழுகப்பட்டு தெய்வீகக் கருத்துடன் இணைக்கப்படுவதால், இவர்களின் செயல் அவர்கள் எழுப்புகின்ற வேள்வித் தீயிலேயே

பஸ்பமாக்கப்படுகிறது. இந்நிலையில் தொல்குடி மக்களாகிய நாம் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருப்பதோடு, அவர்களுடைய அரசியலில் பிணைந்திருக்கின்றோம்.

ஆரியர்கள் வழிபடு முறை

ஆரியர்களின் கோயில் வழிபாட்டு முறையில் திருவுருவத்தை தினமும் அதிகாலை நீராட்டுதல், பத்தாடை அணிவித்தல், அணிமணி மலர்மாலை சூட்டுதல்தினமும் பழம், பலகாரம், உணவை வழங்குதல், ஒவ்வொரு கணமும் இறைவனின் பெயரையும், புகழையும் எண்ணளவும் பாடிக்கொண்டிருத்தல். ஆரியர்களின் வழிபாட்டில் கண் கூச வைக்கும் ஆரவாரமும், புலனுக்கு கவர்ச்சி ஏற்படுத்துதல், கல்வி கற்காத மக்களின் மனதை கவரும் வகையில் உண்டாக்கினர். தமிழர்களின் மட்டற்ற வழிபாட்டு சிந்தனையால் நிகழ்காலத்தைப் பற்றி சிந்திக்காதபடி தடுத்தனர். கடவுள் நம்பிக்கை, இறைபற்று, பக்தியென ஆர்வமுடன் இருப்பது மனிதனின் இயல்பு. இறைநெறியில் ஆர்வம் உண்டான பின்பு அதன் பீடமாக இருந்த கோயில்களில் அர்ச்சனை செய்யும் குருக்களை மக்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டனர். குருமார்களின் சொல்லானது எளிய மக்களுக்கு தெய்வ வாக்காகத் தென்பட்டது.

உடலெரியூட்டல்

வேத வேள்வித்தீ வழிபாடானது வடஇந்தியாவில் வழக்கமான ஒன்று. ஆரிய சமயக் கோட்பாட்டில் இறந்தவர் உடலை புதிதாக எழுப்பும் வேள்வித் தீயில் பலியிடவேண்டும். வேள்வித் தீயில் பலியிடப்பட்ட ஏனைய உயிர்கள் எல்லாம், கடவுள்களுக்குப் படைக்கப்பட்டு புனிதத் தன்மை அடைவது போல, இறந்த மனிதனும், கடவுளுக்கு இணையாக கருதப்பட்டு, புனிதத்தன்மையுடையவனாக்கப் படுகின்றான். இந்நிலையின் அடிப்படையில் எங்கெல்லாம் தீ வழிபாட்டு நெறி பரவியதோ, அங்கெல்லாம் இறந்தவர் உடலைத் தீயிட்டு எரிக்கும் வழக்கம் தோன்றியது. தென்னிந்தியாவில் ஆரிய வழிபாட்டு நெறி வளையத்துக்கு வெளியில் இருப்பதை உறுதியாக கடைபிடித்து வந்த மக்கள் புதைப்பதை விட்டு, தீ வழிபாட்டின் தெய்வீகத் தன்மையை ஏற்று உடலுக்குத் தீயூட்டும் வழக்கத்தை ஏற்றுக் கொண்டனர். உடல் தீயிலிடுவதை,

"எறினக் குறவன் குறையல் அன்ன

கரிபுற விறகின் ஈம ஒள்ளழல்" (புறம்: 231: 1-2)

என்ற பாடலடியின் மூலம் உணரமுடிகிறது.

முடிவுரை

தமிழரிடையே ஊடுருவி நிலைபெற்ற ஆரியர்கள் தமிழரின் சமூக வாழ்வியலோடும் பண்பாட்டோடும் இரண்டறக் கலந்தனர். எனவே, அவர்தம் சமூக மரபுகளும் சமயக் கொள்கைகளும் தமிழர் பண்பாட்டு மரபுகளோடு இணைந்தன. ஆரியர்கள் தமிழ்ச்சமூகத்தோடு ஊடுருவிய பின்பு யாகம் வளர்த்தல் என்பதன் மூலமாக அவர்களுக்குரிய தெய்வத்தினை எவ்வாறு நிலைநிறுத்திக் கொண்டனர் என்பதையும், மொழியின் அடிப்படையில் சமஸ்கிருதத்தினை மேன்மையுடைய மொழியாக உருவாக்கினர் என்பதையும், வழிபாட்டு முறைகளில் சில அடக்கு முறைகளை எவ்வாறு புகுத்தினர் என்பதையும், மக்களிடையே பரித்தாளும் சூழ்ச்சியைக் கையாள்வதற்கு வருணாசிரமக் கொள்கையை எவ்வாறு கொண்டு வந்தார்கள் என்பதையும் இக்கட்டுரையின் மூலமாக நன்கு அறிய முடிகின்றது. தமிழ்ச்சமூக இனக்குழு மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவிற்கு முதற்காரணமாக அமைந்தது ஆரியர்களின் வருகையினால் தான் என்பதில் ஐயமில்லை.

பயன்பட்ட நூல்கள்

[1] பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல் மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.2003

[2] ஜோசப் இடமருகு, பிராமண மதம் அலைகள் வெளியீட்டகம், சென்னை. 2016

[3] புலவர் கா.கோவிந்தன், ஆரியருக்கு முற்பட்ட தமிழ்ப் பண்பாடு ராமையா பதிப்பகம், சென்னை. 2015

[4] சண்முகம் பிள்ளை, சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

[5] சண்முகம்பிள்ளை, சங்கத் தமிழர் வாழ்வியல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. 2004

[6] கருணா மனோகரன், ஆரியர் திராவிடர் தமிழர் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2016

[7] டி.டி.கோசாம்பி, பண்டைய இந்தியா

[8] சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு